செ.வெ.எண்: 08/2020 நாள் :13.08.2020

## விருதுநகர் மாவட்டம்

## கொரோனா நோய்த்தொற்று இல்லாத மாவட்டமாக மாற்ற அனைத்து அரசு அலுவலர்கள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டுமென மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு.கே.டி.ராஜேந்திரபாலாஜி அவர்கள் அறிவுறுத்தல்

விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளர்ச்சி மன்றக் கூட்டரங்கில் கொரோனா நோய்த்தடுப்பு பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.இரா.கண்ணன்.,இ.ஆ.ப., அவர்கள் தலைமை வகித்தார். மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.பூ.பெருமாள்,இ.கா.ப., அவர்கள் முன்னிலை வகித்தார். மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு.கே.டி.ராஜேந்திரபாலாஜி அவர்கள் அரசு அலுவலர்களுக்கு ஆலோசனைகள் வழங்கி பேசும் போது தெரிவித்ததாவது:-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொரோனா நோய் பரவலை தடுப்பதற்கான பல்வேறு கட்ட தொடர் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள். அதனடிப்படையில் நமது மாவட்டத்தை பொருத்தை வரை 3114 காய்ச்சல் முகாம்கள் நடத்தப்பட்டு, 1,62,000 நபர்களுக்கு கொரோனா பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. அதில் 10,629 நபர்கள் கொரோனா நோய் தொற்றினால் பாதிக்கப்பட்டு, இதில் தற்போது வரை 9055 நபர்கள் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். தற்போது 1432 நபர்கள் மட்டுமே தொடர் சிகிச்சை பெற்று வருகிறார்கள். எனவே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி மாவட்ட நிர்வாகம் திறன்பட செயல்பட்ட காரணத்தினால் இறப்பு விகிதம் வெகுவாக குறைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், அனைத்துப் பகுதிகளிலும் கொரோனா பரிசோதனைகள் மேற்கொள்ள மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் அடங்கிய மருத்துவக்குழுக்கள் அமைக்கப்பட்டு, மருத்துவ முகாம்கள் மூலம் கொரோன பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதுமட்டும்மல்லாமல், தலைமையிடத்தில் இருந்து வரும் ஆலோசனைகள் மற்றும் அறிவுரைகளை பின்பற்றி கொரோனா நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டும். மாவட்டத்தில் தற்போது வரை நடைமுறையில் 108 கட்டுப்பாட்டுப் பகுதிகளில் மருத்துவக்குழுக்கள் மூலமாக கொரோனா பரிசோதனைகளை விரைவாக மேற்கொண்டு கட்டுப்பாட்டுகளை தளர்வுசெய்ய உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அதுமட்டும்மின்றி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் நலனில் கருத்தில் கொண்டு தமிழகம் முழுவதும் அனைத்து குடும்ப அட்டை உறுப்பினர்களுக்கும் (தலா 2 முகக்கவசம்) நியாயவிலைக்கடைகள் மூலம் விலையில்லா முகக்கவசம் வழங்குவதற்கு உத்தரவிட்டார்கள். அதனடிப்படையில், நமது மாவட்டத்தில் உள்ள

அனைத்து நியாயவிலைக் கடைகள் மூலமாக சுமார் 5,72,000 நபர்களுக்கு சுமார் 14 லட்சம் முகக்கவசம் விரைவில் வழங்கப்படவுள்ளது.

மேலும், மாவட்டத்தில் உள்ள அனைத்து பொதுமக்களுக்கும் கபசுரக் குடிநீர் மற்றும் நிலவேம்பு கசாயம் மருத்துவத்துறை மற்றும் சித்த மருத்துவத்துறையின் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. அதுமட்டும்மின்றி மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு மருத்துவமனைகள், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு அலுவலகங்களின் முன்பாக தினந்தோறும் கபசுரக் குடிநீர் மற்றும் நிலவேம்பு கசாயம் வழங்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். மேலும், வருவாய்த்துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, நகராட்சி நிர்வாகம், பேரூராட்சி மற்றும் காவல்துறை உள்ளிட்ட துறைகளைச் சேர்ந்த உயர் அலுவலர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து கொரோனா நோய் தடுப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டும். மாவட்டத்திலுள்ள அனைத்து ஊரகப்பகுதிகளில் விழிப்புணர்வு துண்டுப்பிரசுரங்கள் மற்றும் ஒலிப்பெருக்கி மூலமாகவும் விழிப்புணர்வுப் பிரச்சாரங்கள் மேற்கொள்ள வேண்டும். மாவட்டத்திலுள்ள அனைத்துப்பகுதிகளிலும் கொரோனா பரிசோதனைகளை அதிகப்படுத்தி, கொரோனா நோய் தொற்று இல்லாத மாவட்டமாக மாற்ற அனைத்து அலுவலர்களும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு.கே.டி.ராஜேந்திரபாலாஜி அவர்கள் தெரிவித்தார்.

பின்னர், கொரோனா நோய் தடுப்பு பணியின் போது சேத்தூர் ஊரகக் காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்து வந்த திரு.வை.அய்யனார் என்பவர் உயிரிழந்ததையொட்டி அன்னாரது வாரிசுதாரரான/மனைவி திருமதி.அ.மகேஸ்வரி என்பவருக்கும், விருதுநகர் வட்டம் சின்னமூப்பன்பட்டி கிராம உதவியாளராக பணிபுரிந்து வந்த திரு.முருகேசன் என்பவர் உயிரிழந்ததையொட்டி அன்னாரது வாரிசுதாரரான/மனைவி திருமதி.மு.பாண்டியம்மாள் என்பவருக்கும் மாண்புமிகு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.25 லட்சத்திற்கான காசோலையினை மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.இரா. மங்களராமசுப்பிரமணியன், திட்ட இயக்குநர் (மா.ஊ.வ.மு) திரு.சுரேஷ், சிவகாசி சார் ஆட்சியர் திரு.ச.தினேஷ்குமார்,இ.ஆ.ப., கூடுதல் காவல் துணைக் காண்காணிப்பாளர் திரு.மாரிராஜன், இணை இயக்குநர் (மருத்துவப்பணிகள்) மரு.மனோகரன், அரசு அலுவலர்கள், மருத்துவர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், விருதுநகர்.**